# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| வழக்கு எண் | :- | O.S.No.86/2016 |
| வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர் | :- | வா.சா– 02 (PW– 02) |
| பெயர் | :- | அங்குராசு |
| தேதி | :- | 18–08–2025 |

**சான்றாளர் மீண்டும் அழைக்கப்பட்டார். சான்றாளருக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை :–**

சாட்சியம் அளிப்பதற்கு என்னை வாதிதான் அழைத்துவந்தார். நான் தற்போது குமாரபாளையம் ஊரில் வசிக்கிறேன். எனக்கு சொந்த ஊர் தருமபுரி. வாதி அழகேசன் எனக்கு தாய்மாமன் மகன். முத்துநாய்க்கன்பட்டி ஊரில் அழகேசன் வசிக்கிறார். நான் வசிக்கும் இடத்திலிருந்து அவர் வசிக்கும் இடம் சுமார் 50 கி.மீ தூரத்தில் இருக்கும். என்ன பரிகாரம் கோரி வாதி வழக்கிட்டுள்ளார் என்று எனக்குத் தெரியும். வாதி வசிக்கும் வீட்டில் 1/6 பங்கு பாகத்திற்கு வழக்குப் போட்டுள்ளார். அந்த வீடு எந்தப் புல எண்ணில் உள்ள இடத்தில் உள்ளது என்று எனக்குத் தெரியாது.

வாதி எந்தெந்த சொத்துக்கள்மீது பாகம் கேட்டுள்ளார் என்று எனக்குத் தெரியுமா என்றால் ஒரு சொத்து பொறுத்துதான் எனக்குத் தெரியும். சித்தைய பண்டாரம் அழகேசனுக்கு அறுதியாவணம் எழுதிவைத்தார். அந்தச் சொத்தின் புல எண் என்ன, பரப்பளவு என்ன, பட்டா எண் என்ன என்ற விவரம் எனக்குத் தெரியாது. அந்த இடம் எனக்குத் தெரியும். எந்த

ஆண்டு அறுதியாவணம் எழுதப்பட்டது என்று எனக்குத் தெரியாது. நான் சொல்லும் வீடு சித்தைய பண்டாரம் கட்டியது என்றால் சரிதான். அந்த வீட்டில் யார்யார் வசிக்கின்றனர் என்றால் கீழ்வீட்டில் என் அத்தை சுப்புலட்சுமி, அவருடைய மகள்கள் கலா, சாந்தா வசிக்கின்றனர். மேல்வீட்டில் வாதி அழகேசன் வசிக்கிறார்.

சித்தைய பண்டாரம் எந்த ஆண்டு உடல்நிலை சரியில்லாமல் படுத்தப் படுக்கையாக இருந்தார் என்று நான் முதல்விசாரணையில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. 2013-ஆம் ஆம் ஆண்டிலிருந்து அவ்வாறு இருந்தார். சித்தைய பண்டாரம் எந்த மருத்துவமனையில் வைத்தியம் பார்த்தார் என்றால் கோவை ஜெம் மருத்துவமனையில். எப்போது என்று கேட்டால் தற்போது நினைவில்லை. ஜெம் மருத்துவமனையில் வைத்தியம் பார்த்ததற் -கான ஆவணங்கள் என்னிடம் எதுவும் இல்லை. என் முதல்விசாரணை வாக்குமூலத்தில் சித்தையனுக்கு என்ன வகையான உடல்நல குறைபாடு என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போன்று 2013-ஆம் ஆண்டோ அதற்கு முன்போ பின்போ சித்தைய பண்டாரம் ஜெம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேரவில்லை என்றும் அவருக்கு அறுவை சிகிச்சை எதுவும் செய்யப்படவில்லை என்றும் வேறு எவ்வித சிகிச்சையும் அளிக்கப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. அதனால்தான் மருத்துவ ஆவணங்கள் எதுவும் தாக்கல்செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அவர் நல்ல உடல் நலத்துடன்தான் இருந்தார் என்றால் சரியல்ல.

1986-ஆம் ஆண்டு சித்தையன் ஒரு மெத்தை வீடு கட்டினார் என்றால் சரிதான். வேறெந்த வீடும் கட்டவில்லை என்றால் எனக்குத் தெரிந்து ஒரு

வீடுதான் கட்டினார். சித்தையன் 2015-ஆம் ஆண்டு செப்டம்பர்மாதம் இறந்தார். அழகேசன், அவருடைய தாயார், சகோதரி ஆகியோர் கூட்டுக் குடும்பமாக இல்லை. தனிதனியாகதான் உள்ளனர். சித்தையனுக்கு வீடு தவிர வேறு சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல. உள்ளன. அதன் விவரம் எனக்குத் தெரியாது. வீடு இருக்கும் இடத்திற்கு கிரையப் பத்திரம் 01 ஆம் பிரதிவாதி சுப்புலட்சுமி பெயரில் உள்ளது என்றால் சரிதான். அதை சித்தையன்தான் கிரையம் வாங்கி சுப்புலட்சுமி பெயரில் எழுதினார். 01 ஆம் பிரதிவாதி சுயமாக வாங்கினார் என்றால் சரியல்ல.

வழக்குச் சொத்தைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் வாதி கேட்டதற்கு இணங்க நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.